REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

அதிகாரிகள் ஊதியத்தில் புரட்சி!

திருவனந்தபுரம், மார்ச் 24—

கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளின் சம்பள விகிதங்களை திரு-கொச்சி அரசாங்கம் மாற்றி உத்தரவு ஒன்று பிறப்பித்துள்ளது.

இவ்வுத்தரவின்படி, மாதம் ரூ 100 முதல் 300 வரை என்ற விகிதத்திலிருந்து ரூ. 800 முதல் 1000 வரை என்று 14 சம்பள விகிதங்கள் இருக்கின்றன. இதன்படி, அதிகாரிகளின் அதிக பட்சச் சம்பளம் ரூ. 1000 ஆகும்.

மேலும் ரூ 501 முதல் 1000 வரை ஊதியம்பெறும் அதிகாரிகளுக்குக் கிராக்கிப்படி உட்பட்ட ஊதியம் ரூ. 1000-த்திற்கு மேல் இருக்கக்கூடாதென ஒரு வரம்பு கட்டப்படுமாம்.

இப்புது சம்பள விகித உத்தரவுகள், வருகிற ஏப்ரல் திங்கள் முதற்கொண்டு அமுல்நடத்தப்படும் என்று கூறப்படுகிறது.

மலர் 2] சென்னை: பங்குனி 12உ வெள்ளி (25—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 13உ சனி (26—3—55) [இதழ் 242

'கிராம முன்சீபுகளுக்கு இலஞ்சம் கொடுத்தனர்'

இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு வருவோருக்கு இங்கு நிவாரணம் தேவையில்லையாம்!

நிதி மந்திரி சுப்பிரமணியத்தின் கூற்று!

சென்னை, மார்ச் 24—

"இலங்கையிலிருந்து குடிஉரிமை மறுக்கப்பட்டு சென்னைக்குத் திரும்புகிறவர்களுக்கு நிவாரணமளிக்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளுவது இப்போது தேவை இல்லை" என்று சென்னை அரசாங்கம் கருதுவதாக மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

"நிவாரணம் தேவை, என பெரும் அளவில் கோரிக்கை இப்போது வரவில்லை," என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

நிலைமையை சர்க்கார் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், நிவாரண நடவடிக்கைகள் தேவைப்படும்போது அவைகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்றும், அவர் சபையில் உறுதிமொழி கூறியிருக்கிறார்.

காமராசருக்கு வரவேற்பு இல்லை!

கோழிக்கோடு, மார்ச் 24—

சென்னை மாநில முதலமைச்சர் திரு. காமராசர் இங்கு வருகை தரும்போது அவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கக் கோரி மலபார் மாவட்டக் கழகக் கூட்டத்தில், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தீர்மானம் ஒன்று கொண்டு வருவதற்கு, மாவட்டக் கழகத் தலைவர் அனுமதி மறுத்து விட்டாராம்.

மலபார் மாவட்டக் கழகம் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் உள்ளதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

குழப்பமயம்!

தலைமன்னாரில், கள்ளக் குடியேற்றக் குற்றத்திற்காகக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் இந்தியர் இன்றும், ஆனால், அவர்களோ, தாங்கள் இலங்கைக் குடியுரிமை பெறுவதற்கு அருகதையானவர்கள்தான் என்று கூறிக்கொள்வதாகவும், இலங்கை சர்க்கார், அவர்கள் கள்ளத்தனமாக இலங்கையில் குடியேறினவர்கள் என்று கூறுவதாகவும் டெல்லி மேல்சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி செயலாளர்

சோவியத் ரஷ்யாவில் உள்ள இந்தோனேஷியத் தூதுவருக்கு சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளரான நிகிதா குருஷ்செவ், பேட்டி தந்தாராம்!

★★★★★★★ ★★★★★★★★★★

பெரிய இடத்தில்!

★

எதிர்ப்பாளர்களாக இருப்பவர்கள் எல்லாம் மளமளவென்று காங்கிரசில் நுழைந்து தேர்தலில் வெற்றிபெற்று விடுகிறார்களே — அப்படியானால், தந்திரத்தால் அவர்கள் நீண்டகாலக் காங்கிரஸ் பணியாளர்களைத் தோற்கடித்துவிட்டார்கள் என்றுதானே பொருள்? இது அழகா, அறமாமா?

என்று காங்கிரஸ் கட்சியின் பெரிய இடத்தில் கேட்கப்பட்டதாம்.

"ஏனய்யா பீதி! நான் என்ன பைத்தியக்காரனா? யாரார் காங்கிரசை எதிர்க்கக் கூடியவர்களோ, அவர்களை எல்லாம் உள்ளே அழைத்துக் கொண்டால், பிறகு, வெளியே காங்கிரசுக்கு எதிர்ப்பு என்பது அடியோடு ஒழிந்து விடும்; அந்த நிலைமை ஏற்படுகிற வரையில் உள்ளே வருபவர்களுக்கு 'கருப்பட்டி' தருகிறேன்; பிறகு பார்!"

என்று பெருந்தலைவர் கூறிவிட்டுச் சிரிக்கிறாராம்!

★★★★:★★★★★:★★★★:★★★★

பயமுறுத்தவில்லை?

"இந்தியாவில் பிரிட்டிஷ் துணிகளின் மீது இறக்குமதி வரியைக் குறைக்காவிட்டால், பிரிட்டனில் இந்தியத் துணிகள் மீது இறக்குமதி வரி விதிப்பதாசப் பயமுறுத்தும் வகையில் எதுவும் அனுப்பப்படவில்லை,"

என்று, டில்லி மேல்சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதில் தெரிவிக்கையில் உதவி அமைச்சர் கணுங்கோ கூறியிருக்கிறார்.

'சட்டம் அனுமதித்ததை மீறி தேர்தலில் ஆட்களை நியமித்தனர்'

மறுபடியும் தேர்தலில் போட்டி இடுவதற்குத் தடை

உ. பி. காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர் இருவருக்கு தேர்தல் விசாரணை மன்றக் கட்டளை

"தங்களுடைய தேர்தலில் வெற்றி வாய்ப்பை பலப்படுத்துவதற்காக கிராம முன்சீப்புகளுக்கு இலஞ்சம் கொடுத்தனர்—அல்லது கொடுக்க முயன்றனர்."

"சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு அதிகமான ஊதியம் பெறும் தேர்தல் ஊழியர்களை நியமித்தனர்."

என்று, லக்னோ தேர்தல் விசாரணை மன்றம், அரீஷ் சந்திர பாஜ்பாய், இராம சங்கர விவாசி ஆகிய காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள்மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டதாகக் கொண்டு, இரு நபர்களையும் சட்டசபை உறுப்பினர் பதவிகளிலிருந்து விலக்கி, மறு தேர்தலில் அவர்கள் கலந்துகொள்ளக் கூடாது எனவும் கட்டளையிட்டுள்ளது.

★

கண் சிகிச்சை முகாமில் மந்திரியின் தேர்தல் பிரசாரம்

மந்திரியைப் பின்பற்றி மாவட்ட மாஜிஸ்திரேட்டும் பேசினார்

அவர்களை தேர்தல் விசாரணை மன்றம் கண்டிக்கிறது

லக்னோ தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எச். சி. பாஜ்பாய், ஆர். எஸ். விவாசி ஆகிய இரு சட்டசபை உறுப்பினர்கள், தேர்தல் காலத்தில், தேர்தல் விதிகளை மீறி ஒழுக்கக்கேடாக நடந்து கொண்டார்கள் என, அவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கை விசாரித்து, அவர்களைக் குற்றவாளிகள் எனக் கண்டறிந்து தீர்ப்பு கூறிய தேர்தல் விசாரணை மன்றம், தாம் கூறிய தீர்ப்பில், உத்திர பிரதேச சுகாதார மந்திரியான சி. பி. குப்தாவின் போக்கையும், மாவட்ட மாஜிஸ்திரேட்டின் அளவுகடந்த செயலையும் கண்டித்திருக்கிறது.

மாஜிஸ்திரேட்டும், மேற்படி மந்திரியும் கண் சிகிச்சை முகாம் ஒன்றைத் திறந்து வைத்தனர். அந்தத் திறப்பு விழாவில், தேர்தலில் போட்டியிட்ட மேற்படி காங்கிரஸ் உறுப்பினர்களை ஆதரித்து வாக்களிக்கும்படி தேர்தல் பிரசாரமும் செய்தனர். இப்போக்கை வன்மையாகக் கண்டித்திருக்கிறது, தேர்தல் விசாரணை மன்றம்.

'பெரும் புள்ளி'கள் பேராசை எதிரொலி!

லாரி போக்குவரத்து நின்றுவிட்டது

பம்பாயிலுள்ள லாரி முதலாளிகளும், சாமான்கள் புக்கிங் ஏஜண்டுகளும் லாரி போக்குவரத்தை நிறுத்திவிடச் செய்துள்ள முடிவின் விளைவாக, பம்பாயிலிருந்து வெளியிடங்களுக்கு நடைபெற்ற சாமான் போக்குவரத்துக்கள் நின்றுவிட்டன.

சில, பெரும் 'புள்ளி'கள், லாரிகளில் அளவுக்கு மீறின பாரம் ஏற்றுவது, பொது ஒப்பந்தத்துக்கு முரணாகக் குறைந்த கட்டணம் வாங்குவது போன்ற முறை தவறுதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டதே இந்தப் போக்குவரத்துத் தடங்கலுக்கான காரணம் என்று கூறப்படுகிறது

இதனையொட்டி, பம்பாய் லாரி போக்குவரத்துச் சம்மேளனத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

சேலத்து இரும்பைத் தோண்டி எடுக்க!

உருக்குத் தொழிற்சாலை தேவை என இந்தியப் பேரரசிற்கு மனு

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள விண்ணப்பம்

பொறுப்பை மத்திய அரசாங்கத்திடம் அடகு வைக்கிறது சென்னை அரசாங்கம்!

சேலத்து இரும்பைத் தோண்டி எடுத்து உருக்குப் பொருளாக மாற்ற ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என சென்னை அரசாங்கம், இந்தியப் பேரரசிற்கு மனுச் செய்துகொண்டு இருக்கிறது.

அம்மனுவில்; அவசியமானால் வெளிநாட்டு நிபுணர்களைக்கொண்டு மனுவின் உள்ளடக்கத்தை ஆராய்ந்தறிய வேண்டுமென சென்னை அரசாங்கம் விண்ணப்பித்துக்கொண்டு இருக்கிறது.

உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணித்து, சேலத்து இரும்பைப் பயன்படும் பொருட்களாக மாற்றும் ஏற்பாட்டை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு, இந்தியப் பேரரசு தனது சொந்தப் பொறுப்பில் திட்டத்தை செயலாற்ற வேண்டும் என் சென்னை அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

[சேலம் இரும்பை இந்தியப் பேரரசிற்கு 'அடகு' வைக்க முடிவு கட்டி இருக்கிறது சென்னை அரசாங்கம்—ஆ.-ர்.]

சேலம் மாவட்டத்தில் மொத்தத்தில் 304,650,000 டன் இரும்பு கிடைக்கக் கூடுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

எந்த இடத்தில், எந்த அளவில் இரும்பைத் தோண்டி எடுப்பது என்பது இந்தியாவில் நிச்சயிக்க முடியாது.

இத்தறையில், இந்தியப் பேரரசிற்கு, சென்னை அரசாங்கம் கொடுத்துள்ள விண்ணப்பத்தின் விவரத்தை சட்டசபை உறுப்பினர்களின் பார்வைக்குக் காட்ட முடியுமா எனக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, மேற்படி உண்மையை சட்டசபையில் அறிவித்த அமைச்சர் கனம் பக்தவத்சலனார், 'அப்படி அனுமதிப்பது அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது,' என அறிவித்து விட்டார்.

மனித உள்ளம் கொண்டவர்கள்!

நகரைக் காக்கும் பணியில் 'சேவை' செய்தனர்!

திப்ருகர் மார்ச் 24—

பெருவெள்ளச் சேதத்திலிருந்து நகரைக் காப்பாற்றும் பணியில் இங்குள்ள ரிக்ஷாக்காரர்கள், வெள்ளத்தைத் தடுக்கக் கட்டப்படவேண்டிய கரைக்காகத் தங்கள் ரிக்ஷாக்களில் இலவசமாகக் கற்பாறைகளை ஏற்றிக்கொண்டுவந்து குவித்தனராம்.

இந்த பொதுநலப் பணியில் 300-க்கும் மேற்பட்ட ரிக்ஷாக்காரர்கள் ஈடுபட்டதாகவும், அவர்களது இந்தப் பணியினைக் கண்ட பின்னர் அங்கிருந்த மக்கள் பலரும் கற்களைக் குவித்தனர் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—3—'55 வெள்ளி

அலட்சியம் ஏன்?

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் கைத்தறி வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியப் பேரரசின் தலைவர் இராசேந்திர பிரசாத் அவர்கள், 'கைத்தறி ஓங்குக,' என பல்லாண்டு கூறியுள்ளார்.

ஆங்காங்கே நடைபெறும் விழாக்களில் ஒவ்வொரு நாளும் அங்கங்குள்ள அமைச்சர்களும், பலதிறப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு, கைத்தறி வளம் பெற்று வாழ வாழ்த்தியும், அரிய கருத்துக்களைக் கூறியும் வருகின்றனர். மேற்படி விழாக் கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் பங்கு கொண்டு, கைத்தறி ஆடைகளின் அருமை பெருமைகளை தெரிந்து கொள்ளுகின்றனர்.

நேர்த்தியான கைத்தறி ஆடைகளின் காட்சியையும் பொதுமக்கள் காண்கின்றனர்; அவைகளை உருவாக்கிய நெசவாளியின் கைத்திறத்தை அவர்கள் பாராட்டவும் செய்கின்றனர்.

தலைவரின் நல்லாசி, அமைச்சர்களின் அறிவுரை, கண்ணையும் கருத்தையும் கவரும் பல வண்ணச் சேலைகள் போதிக்கும் படிப்பினை, இவ்வளவும் மிக மிகப் பகட்டாக இருந்து வருகின்றன. இவ்வளவும் நெசவாளர்களின் பிரச்சினையைப் போக்கத் தவறி விடுகிறதே எனக் கருதும்பொழுது, ஒருவருக்குத் துக்கமும் துயரமும் ஏற்படுவது இயற்கையே யாகும்.

அடுத்தடுத்து, அல்லது இரண்டாண்டுக்கு ஒருமுறை நெசவாளர்கள் அரும்பாடுபட்டு உழைத்து உருவாக்கிய கைத்தறி ஆடைகள், விலை போகாமல் போர் போராகத் தேங்கிவிடுவதும், அதன் பலனாக வேலையின்மைக் கொடுமைக்கு நெசவாளர்கள் பலியாவதும், அதன் காரணமாக சொந்தப் பேரூர்-சிற்றூர்விட்டு குடும்பம் குடும்பமாக நெசவாளர்கள் இடம் பெயர்ந்து, கண்களில் நீர் பெருக, கருத்தில் இருள் சூழ பிச்சை புகும் கோரக்காட்சி கூடி வளருவதும் இருந்து வருகின்றன. எனவே, இத்தகு இழிநிலை இனியும் நெசவாளர்களைப் பற்றாமல் இருக்கும் வகையில், கைத்தறி நெசவுத் தொழிலை, சொந்த பலத்தில் நிலைத்துவாழ ஏற்பாடு செய்யவேண்டியது நாடாளவந்த நல்லவர்களின் நீங்காக் கடமையாகிறது.

பல நிறச் சேலைகளையும், கரை போட்ட வேட்டிகளையும் கைத்தறிகளுக்கே ஒதுக்கிவிட வேண்டும் என சென்னை சட்டசபை, இந்தியப் பேரரசிற்கு சென்ற ஆண்டில் கோரிக்கை ஒன்றைக் கொடுத்திருக்கிறது. இக்கோரிக்கை நாடாளும் காங்கிரஸ் கட்சியினராலேயே கொண்டுவரப்பட்டு, எதிர்க் கட்சியினரின் ஒருமுகமான ஆதரவு பெற்று, சென்னை சட்டசபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதாகும்.

கைத்தறிக்குப் பாதுகாப்பு அளிக்க, கைத்தறியாளர்களுக்கு வாழ்வுதர, தாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் அன்பர் ஆச்சாரியார் அவர்களால் அத்தீர்மானம் உருவாக்கப்பட்டது. அவர் சொல்லிலே ஐயம், அவர் செயலிலே சந்தேகம், அவர் முறையிலே கொஞ்சம் வெறுப்பு கொண்டிருக்கும் அரசியல் எதிர்க் கட்சியினராகிய நாம் கூட, கைத்தறி பற்றி அவருடைய கோரிக்கையை முழு மனதுடன் தீவிரமாக ஆதரித்தோம். அதை, நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் அறிமுகப்படுத்தினோம். நம்மைப் போலவே, மற்ற எதிர்க் கட்சியினர் அனைவரும் ஆச்சாரியார் தீர்மானத்திற்கு ஒரே மூச்சாக ஆதரவு காட்டினர்.

இதுவரை சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு தீர்மானத்திற்கும் கிடைக்கப் பெருத ஒருமுகமான ஆதரவு, கைநெசவு பாதுகாப்புத் தீர்மானத்திற்குக் கிடைத்திருக்கிறது.

ஆளும் கட்சியினர் கோருகின்றனர்.

எதற்கும் ஆச்சாரியாரை எதிர்த்துக்கொண்டு இருந்தவர்கள், எதிர்ப்பை அறவே கைவிட்டு, ஆச்சாரியார் கோரிக்கையை ஆதரித்தனர்.

நாட்டு மக்கள் ஆதரித்தனர்.

கைநெசவாளர்கள் அனைவரும் ஆதரித்தனர்.

இதுமட்டுமல்ல; ஆந்திர மக்களும் — நெசவாளர்களும் ஆச்சாரியார் கோரிக்கையை ஆதரித்துள்ளனர் — அன்று அவர்களது சட்டசபைப் பிரதிநிதிகளும், சென்னை சட்டசபையில் வீற்றிருந்த காரணத்தால்!

இவ்வளவு பெரும் ஆதரவு எதைக் காட்டுகிறது?

சென்னை, இன்று பிரிந்துள்ள ஆந்திர மாநிலம் ஆக இரண்டும் சேர்ந்து கூட்டாகக் கேட்டிருக்கிறது—கரை போட்ட வேட்டிகளையும், பலவண்ணச் சேலைகளையும் உற்பத்தி செய்வதை கைத்தறிகளுக்கே ஒதுக்கி விட வேண்டும் என!

இக்கோரிக்கை, இன்று நேற்று பிறந்ததல்ல—ஓராண்டுக்கு அதிகமாகி விட்டது.

சென்னை மாநில சட்டசபை கோரிக்கையை, இந்தியப் பேரரசு அலட்சியப்படுத்தி விட்டது!

மக்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க இந்தியப் பேரரசு மறுக்கிறது.

மக்களாட்சியை மதித்து நடந்துகொள்ள இந்தியப் பேரரசு விரும்பவில்லை! வீண் பிடிவாதம் பேசுகிறது! எதேச்சாதிகாரமாக நடக்கிறது! சர்வாதிகாரம் செய்கிறது!

'எங்கள் சட்டசபைத் தீர்மானத்தை உடனடியாக செயலாற்று'என கேட்டுக்கொள்ள, கனம் காமராசருக்கு நெஞ்சுத் துணிவு இல்லை! சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைத் தெரியாதவர் போல, கதர் உண்டியல் முறையை, கைத்தறி ஆடைகளுக்கும் மேற்கொள்ளலாம் என 'அறிவுரை' அளக்கிருர் கனம்! அடுக்குமா இந்தப் பாராமுகம்? உண்டியல் முறையைத் திணிப்பதால் மட்டும் கைத்தறி தன் காலால் நின்று வளரும் பாங்கு பெறுமா?

சென்னை சட்ட சபை முடிவைநிறைவேற்ற இந்தியப் பேரரசு முன்வருவதின் மூலம் தான், கைத்தறித் தொழில் நிலையான வாழ்வு பெறும் என, சென்னை விழாவில் கலந்து கொண்ட நிதி அமைச்சர், அச்சம் நீங்கி ஆணித்தரமாகக் கூறி இருக்கும்பொழுது, அவ்வழியைப் பின்பற்றி அக்கருத்தைத் தம் திருநாவால் உச்சரிக்கக்கூட, உள்ள உரம் கனம் காமராசருக்கு இல்லாமல் போனது, வேதனை தரும் விசித்திரமேயாகும்!

அதே விழாவில் நிதி அமைச்சர் குறிப்பிட்டது போல், 'கைத்தறித் துணிகளின் காட்சியும், சிறப்புச் சொற்பொழிவுகளும் பயன் தரும் என்பதில் ஐயமில்லையாயினும், பிரச்சினையைச் சீராக்க உதவாது' என்ற கருத்தைத்தான், கனம் காமராசரின் கைத்தறி உண்டியல் யோசனைக்கும் கூற வேண்டியதாக இருக்கிறது.

செய்ய வேண்டியதைச் செய்ய இந்தியப் பேரரசு மறுக்கிறது; அதுவும் அறியாமையினால் அல்ல—விளக்கமாக அறிந்தே மறுக்கிறது.

அதை மறைக்கவே—தன் போக்கை திராவிடப் பெருங்குடி மக்கள் அறிந்துகொள்ளாமல் இருக்கவே பிரச்சாரம், காட்சி என, கைத்தறி விஷயத்தில் பகட்டான நடவடிக்கையில் இந்தியப் பேரரசு இறங்கி இருக்கிறது.

செய்ய வேண்டியதைச் செய்யாமலும், உண்மையான பயன்தராததைச் செய்தும், ஆகிய இரண்டு தவறுகளைச் செய்து வருகிறது இந்தியப் பேரரசு!

சென்னை கோரிக்கையை வேண்டுமென்றே இந்தியப் பேரரசு அலட்சியம் செய்து வருகிறது. 'அலட்சியம் ஏன்?' எனக் கேட்க வேண்டிய கனம், 'அறிவுரை' கூறுகிருர்; அது யாருக்கும் தெரியாது என்ற எண்ணத்தாலோ என்னவோ!

'சோரம்' இல்லாமையால் நகரசபைக் கூட்டம் ஒத்திவைப்பு

பம்பாய் மாநிலத்தில் உள்ள சின்னூர் நகரசபைக் கூட்டம் 'சோரம்' இல்லாமையால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில், ஒரு மனுவையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான்கு உறுப்பினர்கள் கோரினராம். தலைவரான டி என். ஹாண்டே என்பவர், அதற்கு மறுத்துவிடவே, அந்த நான்கு உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினராம்; அதனால்தான் சபையில் 'சோரம்' இல்லாது போயிற்றும்.

'டெலிபோன் எக்ஸ்சேஞ்சு'களுக்கான உதவி பாகங்களில் சுமார் 50 சதவிகிதம் தற்போது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது

1954—55-ம் ஆண்டில் முதல் ஒன்பது மாத காலத்தில் கதர் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் சகாயத் தொகைகளாக ரூ. 38,56,000-மும், கடனாக ரூ 1,21,75,000-மும் அளித்துள்ளனர்.

சௌராஷ்டிரத்திற்கு ஒரு உரத் தொழிற்சாலை?

சிந்திரி உரத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 55 வழிச் செலவாகிறதாம்!

வடக்கு குஜராத், இராஜஸ்தான், மத்திய பிரதேசம், மத்திய பாரத் பகுதிகளில் சிக்கனமாக விற்கலாமாம்!

சௌராஷ்டிர அரசாங்க 'தேசீய'க் கோரிக்கை

★

தினசரி 250-லிருந்து, 500 டன் வரையில் உற்பத்தி செய்யக் கூடிய வகையில் சௌராஷ்டிரத்தில் செயற்கை உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவ வேண்டுமென, செயற்கை உர உற்பத்திக் குழுவிற்கு கோரிக்கை விடுத்திருக்கிறது—சௌராஷ்டிர அரசாங்கம்!

"ஏற்படுத்தப்பட்டுவரும் பாசன வசதியின் காரணமாக, சௌராஷ்டிரம் முழுவதிலும் 1949—50-ல், 450 டன் உரம் உபயோகப்படுத்தப்பட்டதற்கு மாறாக, 1954-ல் 10 000 டன் உரம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது; மேலும் சில ஆண்டுகளில் விரிவடைய இருக்கும் பாசன வசதியின் விளைவாக அதிகப்படியான உரத்திற்குத் தேவை ஏற்படுவது நிச்சயம்; அத்தேவை ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் டனாக உயரக்கூடும் என மதிப்பிடப் படுகிறது."

—மேற்கூறிய உண்மைகளை, சமீபத்தில் சௌராஷ்டிரத்திற்குச் சென்றிருந்த உர உற்பத்திக் குழுவிடம் அந்நாட்டு அரசாங்கம் விளக்கிக் கூறி இருக்கிறது.

மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சௌராஷ்டிரத்திற்குத் தேவைப்படும் உரம் சிந்திரி தொழிற்சாலையிலிருந்து தற்சமயம் கொண்டு வரப்படுகிறது. அதற்காகும் வழிச் செலவு, டன் ஒன்றுக்கு ரூ. 55- ஆக இருக்கிறது. விவசாயப் பொருட்களின் விலை வீழ்ச்சியின் காரணமாகவும், மாறுதல் அடைந்துவரும் நிலையில் செயற்கை உரத்தை உபயோகிப்பது சிக்கனமாக இல்லை என விவசாயிகள் எண்ணுமல் இருக்கவும், செயற்கை உரத்தின் விலையைக் குறைக்க வேண்டியது கட்டாயமாகும்.

"சௌராஷ்டிரத்திலேயே ஒரு செயற்கை உரத் தொழிற்சாலையை நிர்மாணித்துவிட்டால், சிந்திரி உரத்தைக் காட்டிலும் மிகக் குறைந்த விலையில், தேவைப்படும் உரம் இங்குள்ள விவசாயிகளுக்குக் கிடைக்க வழி ஏற்படும்.

"இதனுல் சௌராஷ்டிரத்தின் உரத் தேவை நிறைவேறுவது மட்டுமின்றி, வடக்கு குஜராத், ராஜஸ்தான், கூச், மத்தியப் பிரதேசம், மத்திய பாரத் முதலிய பகுதிகளுக்கும் சௌராஷ்டிர உரத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உரத்தை, மலிவான விலையில் கொடுப்பது சாத்தியமாகும்."

தவறு செய்தவர் யார்?

பத்தாண்டு ஏடுகளைப் புரட்டுவதில் பயனில்லை!

"பத்தாண்டுகளுக்கு முற்பட்ட ஏடுகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு, 'தவறு செய்தவர் யார்?' என்று ஆராய்ச்சி நடத்துவதில் எவ்வித பயனும் கிடையாது,"

என்று, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவர், 'யால்டா' மாநாட்டின் தஸ்தாவேஜுகள் பற்றிக் குறிப்பிடுகையில் கூறியிருக்கிருர்.

பள்ளியை மூடிய தேனீக்கள்!

மொராதாபாத்திலுள்ள ஆரம்பப் பள்ளி ஒன்று, தேனீக்களின் ஆவேசத் தாக்குதலுக்கு இலக்காகி 3 நாட்களாகத் தொடர்ந்து மூடப்பட்ட செய்தி ஒன்று வெளியிடப் பெற்றிருக்கிறது.

அப்பள்ளியைச் சேர்ந்த பையனொருவன் தேன் அருந்த அவா கொண்டு ஒரு தேன் கூட்டின்மீது கல்லை வீசினதாகவும், இதனுல் கோபாவேசம் கொண்ட தேனீக்கள் மாணவர்களையும், ஆசிரியர்களையுங்கூடத் துரத்த ஆரம்பித்தனவாம்.

மாணவர்களும், ஆசிரியர்களும் தேனீக்களிடமிருந்து தங்களை தப்புவித்துக் கொள்ள பெஞ்சுகளுக்கு அடியிலெல்லாம் பதுங்கி ஒளிந்து கொண்டனராம். இருந்தும், தேனீக்களால் 'பலமாகத் தாக்கப்பட்ட' பல மாணவர்கள் உடம்பில் வீக்கம் கண்டு பள்ளி வர முடியாமலிருந்ததால் அப்பள்ளி 3 நாட்களுக்கு மூடப்பட்டிருந்ததாம்!

தென்னாட்டு தீப்பெட்டி தொழிலுக்கும் போட்டி

வடக்கே வளர்கிறது

மகாராஷ்டிரத்தில், குடிசைத் தொழில் அடிப்படையில் தீப்பெட்டி உற்பத்தித் தொழில் துவக்கப்படும் என்று தெரியவருகிறது.

இந்தத் தகவலை பிராந்திய குடிசைத் தொழில் குழு அமைப்பாளரான என். ஜி. ஷெண்டே என்பவர் வெளியிட்டுள்ளார்.

அந்தக் குழு, ஏற்கனவே தீப்பெட்டி உற்பத்திக்காக 5 யூனிட்டுகளை நிறுவியுள்ளதாகவும், தீப்பெட்டி உற்பத்திப் பயிற்சிக்காக இரண்டு பட்டதாரிகள் கல்கத்தா, சோட்பூர் முதலிய இடங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைக்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

---

228 பேர்களுக்கு ஒரு போலீசார்!

பம்பாய் நகரத்தில் 228 பேர்களுக்கு ஒரு போலீஸ்காரர் இருப்பதாக பம்பாய் சட்ட சபையில் விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் துளசிதாஸ் ஜதாங் கூறியிருக்கிருர்.

போலீஸ் இலாகா மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசிய அவர், இங்கிலாந்து நாட்டில் உள்ள மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் கூட, 420 பேர்களுக்குத்தான் ஒரு போலீஸ்காரர் இருக்கிருர் என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிருர்.

1948-ம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட பி. சி. ஜி ஊசி குத்தும் ஏற்பாட்டின்கீழ், இதுவரை சுமார் 4 கோடி பேர் க்ஷயரோகப் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்; அவர்களின் க்ஷயரோகப் பாதுகாப்பு தேவைப்பட்ட 1 கோடி 29 லட்சம் பேருக்கு க்ஷயரோக ஊசி போடப்பட்டது.

விவசாயத் தொழிலாளர் ஊதியம்

மத்திய மந்திரியின் விளக்கம்

"விவசாயத் தொழிலாளருக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் சம்பந்தமாக சர்க்கார் தன்னாலானவற்றையெல்லாம் செய்யும்; ஆனால் இன்னும் சிறிதுகாலம் அதற்கென பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், சிறிய மிராசுதாரர்களிடம் வேலைபார்க்கும் தொழிலாளருக்கு ஊதியம் நிர்ணயிக்கும் வேலையானது சிக்கல் நிறைந்த ஒன்றாகும். அதுதவிர, அவர்களின் தொகையும், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கால்பங்கு என்பதையும் மறந்துவிடக்கூடாது."

—இவ்வாறு, டெல்லி மக்கள் சபையில் தொழிலாளர் நல இலாகா உபமானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய தொழிலாளர் நல அமைச்சர் கந்துபாய் தேசாய் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் கூறினார்:—"தொழில்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் போதிய அளவு பங்கு கொள்ளச் செய்யும் திசையில் சர்க்கார் ஒரு படி முன்னேறி நடவடிக்கை எடுக்க முடியும் என நம்புகிறேன்; ஏராளமாக உள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள் தவறாக அமுல் நடத்தப்படுவதுடன், தொழிலாளருக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்காதது பெருங் கஷ்டத்தையும் உண்டுபண்ணுகிறது."

தோட்டச் சட்டத்தை சர்க்கார் விரைவில் அமுல் நடத்தவிருப்பதாயும், தேயிலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாகவே அதனை அமுல் நடத்துவது தாமதப்பட்டது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

உறுதிமொழி பெற்று வருமாறு தீர்மானித்துள்ளது.

செயற்குழுவிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள அந்த உபகுழுவில், தொழிற்கட்சித் தலைவர் அட்லி, மற்றும் பல தொழிற்சங்க இயக்கத் தலைவர்களும் இடம் பெற்றிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

'உழைப்பாளர் படை' உருவாகும்?

திட்டக் குழு ஆலோசகரின் யோசனை!

புதுடில்லி, மார்ச் 22—மக்களுக்கு வேலை வசதி அளித்து நாட்டின் பொருளாதார நிலையை முன்னேற்றவும், மக்களிடையே ஒருமைப்பாடு, கட்டுப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்தவுமான நோக்குடன், 10 லட்சம் பேர் கொண்ட 'உழைப்பாளர் படை'யொன்றை ஆரம்பிக்கலாமென்று டெல்லி பொருளாதாரப் பள்ளியின் டைரக்டரும், திட்டக் குழுவின் ஆலோசனையாளருமான டாக்டர் ராவ் யோசனை ஒன்று தெரிவித்திருக்கிறார்.

கிராமப் புறங்களிலுள்ள மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களிடையேயிருந்து இப்படையைத் திரட்டி விடலாமென்றும், இதனை ஓரளவு இராணுவக் கட்டுப்பாடு உடையதாகவே வைத்துக் கொள்ளலாம் என்றும் மேலும் அவர் கூறியிருக்கிறார்.

இப்படையின் தொகையை துவக்கத்தில் இரண்டு இலட்சம் பேராக இருப்பதை, இரண்டாவது ஆண்டு காலத்தில் இரண்டு இலட்சமாக உயர்த்தலாம் என்பது அவருடைய கருத்து என்றும் கூறப்படுகிறது.

அனூரின் பெவான்

வெளியேற்றப்படமாட்டார்

லண்டன், மார்ச் 23—பிரிட்டிஷ் தொழிற் கட்சியிலிருந்து விலக்கப்படுவதாக அச்சுறுத்தப்பட்ட கட்சியின் இடதுசாரித் தலைவர் அனூரின் பெவான் மீது நடவடிக்கை எடுப்பது நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மக்கள் சபையில் நீர்வளிக்குண்டு பற்றிய கட்சியின் கொள்கையை பகிரங்கமாக எதிர்த்துப் பேசியதற்காக சென்ற வாரத்தில், தொழிற் கட்சியின் 'பார்லிமெண்டரி போர்டு' அவரை நீக்கிவிட்டு, தொழிற்கட்சியிலிருந்தே பெவானை வெளியேற்றவேண்டும் என்று சிபாரிசு செய்திருந்தது.

இப்போது அதுபற்றி விவாதித்துவிட்டு, கட்சியின் செயற்குழு, உபகுழு ஒன்றை நியமித்து, அக்குழு பெவானை சந்தித்து, இனி பெவான், கட்சியின் கொள்கைகளையும், தலைமையையும் மீறி நடந்து கொள்ளமாட்டார் என்று

மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றம்

சில புள்ளி விபரங்கள்

சென்னை சட்டசபையில், 1955-56-ம் ஆண்டிற்கான வரவு-செலவு விவாதத்தில், எல்லா மானியக் கோரிக்கைகளும் நிறைவேற்றப் பட்டு விட்டன.

மொத்தமுள்ள 42 மானியப் பிரரேபணைகளில் 30 பிரரேபணைகளை சபை விவாதித்தும், மீதமுள்ள 12 பிரரேபணைகளை சபைத் தலைவரால் வாக்கெடுப்புக்கு விடப் பட்டும் நிறைவேற்றியது.

மொத்த மானியப் பிரரேபணைகளிலுள்ள 33 ரெவினியூ கணக்கு செலவினங்களின் கீழ் ரூ 57,08,71,300 வருகிறது.

இதர செலவினங்களின் கீழ் 9 மானியப் பிரரேபணைகள் ரூ 31,36,45,400-க்கு வருகின்றன.

ஆக மொத்தம் 42 கோரிக்கைகளுக்கும் கோரப்படும் மொத்த மானியத்தொகை ரூ 88,45,16,700 ஆகும்.

விவாதமில்லாமல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேறிய மானியப் பிரரேபணைகள் விபரம்:-

ரெவினியூ கணக்கின் கீழ்:

கலால் இலாகா:	ரூ. 6,08,900
அஞ்சல் தலை நிர்வாகம்:	ரூ 12,96,200
ரெஜிஸ்திரேஷன் இலாகா:	ரூ. 40,39,700
பஞ்சம்:	ரூ. 1,50,000
பென்ஷன்கள்:	ரூ 1,80,53,400
ஸ்டேஷனரி, பிரிண்டிங்:	ரூ. 1,07,20,600
இதர சில்லறை வகையில்:	ரூ. 1,06,70,300

இதர செலவினங்களின் கீழ்:

ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு:	ரூ 22,00,000
பென்ஷன்கள் எதக்குறைய மதிப்பு:	ரூ. 15,65,000
மாகில வர்த்தகத் திட்டங்களுக்கு மூலதனம்:	ரூ. 3,73,03,500
மை தொழில் அபிவிருத்தி மூலதனம்:	ரூ 33,31,900
சிவில் வேலை மூலதனம்:	ரூ. 97,40,100

போலீசார்-பசுவதை-எதிர்ப்பாளர் அடிதடி

9 போலீசார் உட்பட 18 பேருக்குக் காயம்

முதலமைச்சர் வீட்டின் முன் நடந்த சம்பவம்

பசுவதைத் தடுப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் — போலீசாருக்குமிடையே ஏற்பட்ட ஒரு கைகலப்பின் விளைவாக 9 போலீசார் உட்பட 18 பேர் காயமுற்றனர் என்று ஒரு செய்தி வெளி வந்துள்ளது.

மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள், பசுவதை எதிர்ப்பு ஊர்வலமாகச் சென்றுகொண்டிருக்கையில், மாகில முதலமைச்சர் வீட்டுக் காம்பவுண்டில் பிரவேசிக்க முயற்சித்ததாகவும், அவர்களை தடுத்து நிறுத்த போலீசார் முயற்சி செய்தும் பலிக்காமல் போகவே போலீசார் தடியடிப் பிரயோகத்திலிறங்கியதாகவும், இதன் விளைவாக 18 பேர்—9 போலீசார் உட்பட காயமுற்றனர் என்றும் அச்செய்தி தெரிவிக்கிறது.

மேற்படி ஊர்வலத்தில், கையில் மூங்கில் தடிகளுடன் கலந்து கொண்ட மொத்தம் 28 ஆர்ப்பாட்டக்காரர்களும், கலவரம் விளைவித்ததற்காகவும், சர்க்கார் சிப்பந்திகளைத் தாக்கியதற்காகவும், போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தங்கள் கைகளில் தாங்கியிருந்த கொடிக் கம்புகளையும், மூங்கில் தடிகளையும் போலீசாரைத் தாக்குவதில் தீவிரமாக உபயோகித்தனராம்! இத்தச் சம்பவம் நடைபெறுகையில் முதலமைச்சரும் வீட்டில் இருந்ததாகவும், ஆனாலும் அவர் வீட்டைவிட்டு வெளியேவரவில்லை என்றும் தெரிகிறது.

அ. இ. கூட்டுறவு கைத்தறி 'மார்க்கெட்டிங்' சங்கம்

அகில இந்திய கைத்தறிக் குழு ஆரம்பிக்கும் 'அகில இந்திய கூட்டுறவுக் கைத்தறி மார்க்கெட்டிங் சங்கம்,' சட்டப்படி சர்க்காரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இச்சங்கம், மாநிலங்களிடையே கைத்தறித் துணி வியாபாரத்தை அதிகரிக்கவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியைப் பெருக்கவும் வழி செய்வதுடன், அதனுடைய உறுப்பினர்களாயுள்ள மற்றச் சங்கங்களுக்கு நூல் முதலிய பொருட்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்றும் கூறப்படுகிறது.

இது தவிர, வெளிநாடுகளில் நிலவிவரும் மார்க்கெட் நிலவரங்களை ஆராய்ந்து, அதன்படி தகுந்த ரகத் துணிகளை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளையும் கவனித்துக்கொள்ளுமாம்.

சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 லட்சம் என்றும், இதுவரை வசூலிக்கப்பட்டுள்ள தொகை ரூ 1 லட்சம் என்றும் தெரிய வருகிறது.

சர்க்கார் ஊழியருக்குக் கடுங்காவல்

கள்ளக் கையெழுத்திட்டு சர்க்கார் பணத்தை மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட மூன்று சர்க்கார் ஊழியர்களுக்கு, பூனா விசேஷ நீதிபதி அபராதமும், சிறைத் தண்டனையும் விதித்திருக்கிறார்.

முத்தா கால்வாய் திட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த ஒரு உதவி பொறுப்பான அதிகாரி, ஒரு மேற்பார்வையாளர், ஒரு மேஸ்திரி ஆகிய மூவரும் தொழிலாளர்களின் சம்பளத் தொகையான 270 ரூபாயை கடந்த 1953-ஜனவரித் திங்களில் தாங்களே கள்ளத்தனமாகக் கையெழுத்திட்டு பதிப்பித்து எடுத்துக் கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

குற்றம் ருசுவாகிவிட்டதாகக் கருதிய நீதிபதி, அதிகாரிக்கு ஓராண்டுக் கடுங்காவலும்—ரூ. 1,000 அபராதமும், மேற்பார்வையாளருக்கு ரூ. 250 அபராதமும், —மூன்று மாதக் கடுங்காவலும், மேஸ்திரிக்கு ஓராண்டுக் கடுங்காவலும்—ரூ. 250 அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறார் என்று தெரிய வருகிறது.

ரூ. 500 கோடியா?

புதுடில்லி, மார்ச் 23—மேற்கு பாகிஸ்தானில் அகதிகள் விட்டுவந்த நகரப் பிராந்திய நிலபுலன்களின் மதிப்பு ரூ. 500 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதுவரையிலும் சுமார் 35,000-த்திற்கு மேற்பட்ட அகதிகளுக்கு ரூ 10 கோடிக்கு மேல் நஷ்டஈடு தரப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சட்டசபையில்....

★

கால்நடை மருத்துவ நிலையம்

சென்னை சர்க்காரின் 1955—56-ம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டங்களில், சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார்கோவிலில் ஒரு கால்நடை மருத்துவ நிலையம் திறப்பது சேர்க்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்டம் அனுமதிக்கப்பட்டால், அந்த மருத்துவமனை 1955—56-ம் ஆண்டில் திறப்பட்டுவிடுமென்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஏ பி. ஷெட்டி தெரிவித்துள்ளார்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகள்

சென்னை மாநிலத்தில், 1954-ம் ஆண்டில் 1,018 வடிமுனைகுழாய்க் கிணறுகளுக்கு வசதி செய்துதரப்பட்டதென்றும், இவற்றுள் நெல்லை மாவட்டத்திற்கு மட்டும் ஒன்றும் கிடையாது என்றும் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் பக்தவத்சலம்.

'அலவன்ஸ்' தருவது அவசியமற்றதாம்!

சில புள்ளி விவர சேகரிப்பு சம்பந்தமான வேலை அதிகரிப்புக்காக, கிராமக் கணக்கர்களுக்கு அதிகப்படியான படி தருவது அல்லது இவ்வேலைகளுக்காக அதிக சிப்பந்திகள் தருவது ஆகிய பிரச்சினைகளைதையும் சர்க்கார் உத்தேசிக்கவில்லை என்று அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார். அது மட்டுமல்லாமல் இவ்வேலைக்கு அதிக 'அலவன்ஸ்' தருவதும் 'அவசியமற்றது' என்று சர்க்கார் கருதுவதாகவும் கூறினார்.

நிதி ஒதுக்கவில்லையாம்!

செயற்கைப்பட்டு கைத்தொழில் அபிவிருத்திக்கென இதுவரையிலும் மத்திய சர்க்கார், கைத்தறி 'செஸ்' நிதியிலிருந்து நிதி எதும் ஒதுக்கவில்லையென்று அமைச்சர் பக்தவத்சலம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் வெளியிட்டார்.

அதுதானே கிடையாது!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சினைகள் பற்றி திட்டக் குழுவிற்கு ஆலோசனை கூற பொருளாதார நிபுணர்களடங்கிய குழுவின் பட்டியல் பற்றி மாநில சர்க்கார், மத்திய சர்க்காரால் கலந்தாலோசிக்கப் பட்டதா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது 'இல்லை' என்று பதிலளிக்கப்பட்டது.

கிராமக் கல்லூரிகள்

சென்னை மாநிலத்தில் இரண்டு கிராமக் கல்லூரிகள் ஏற்பட்டு, அவற்றுள் ஒன்று பின்னர் மூடப்பட்டு, தற்போது ஒன்றுதான் இயங்கி வருகிறதென்றும், இந்தப் பரீக்ஷார்த்தத் திட்டத்தின் பலனைக் கவனித்து அதிகமாக இப்படிப்பட்ட கல்லூரிகள் ஏற்படுத்துவதை சர்க்கார் கவனிக்கும் என்றும் அமைச்சர் சுப்பிரமணியம், கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

படித்ததை மறக்கும் மாணவர்களுக்கு......!

"ஐந்து ஆண்டுகள் பள்ளிகளில் படித்துவிட்டு பின்னர் ஒரிரு ஆண்டுகளில் படித்தவற்றை மறந்துவிடும் கிராமாந்திரப் பகுதி மாணவர்களுக்கு மீண்டும் படிப்பின்மையான ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்க்க என்னென்ன ஏற்பாடுகள் செய்து தரப்படுகின்றன?" என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர், 5 ஆண்டுகளாக ஆரம்பப்பள்ளிகளில் படித்து 5-வது வகுப்பையும் முடித்த கல்வி அறிவு ஏற்பட்டபின் மீண்டும் படிப்பின்மை நிலை ஏற்படாது என்பதே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை என்றும், இவர்களது படிப்பு மாசுபடாமல் விருத்தியடைய வேண்டிய அளவுக்குப் புத்தகாலய இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடும் 'பிரம்மச்சாரி'களும்!

"குடும்பக் கட்டுப்பாடு பிரச்சினையில், வெறுப்பும், சலிப்பும் மிகுந்த பிரம்மச்சாரிகள்களுக்கு அறிவூட்ட உபயோகிக்கப்படுவதை சர்க்கார் கவனிக்குமா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, மந்திரி ஷெட்டி, 'அம்மாதிரியான உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை தம்மிடம் தந்தால் கவனிப்பதாகக் கூறினார்.

குடும்பக் கட்டுப்பாடுகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டவும், தகவல்கள் தெரிவிக்கவும், அந்தந்த பிரதேச மொழிகளில் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விளம்பரப்படுத்த சர்க்கார் ஆலோசிக்கிறது என்றும், இதுதவிர 8 'கிளினிக்கு'களையும் ஆரம்பிக்க உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

புனர்வாழ்வுத் திட்டம் பரிசீலனையிலாம்!

ஆரணியாறு திட்ட வேலையின் விளைவாக செங்கற்பட்டு, சித்தூர் மாவட்டங்களில் 3,300 பேர் பாதிக்கப்படுகின்றனரென்றும், அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டம் ஒன்று மாவட்டக் கலெக்டரின் பரிசீலனையிலிருந்து வருவதாகவும் அமைச்சர் மாணிக்கவேலர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

நஷ்டயீட்டைக் காலதாமதமின்றி கவனிப்பதாகக் கலெக்டர் கூறியிருக்கிறாரென்றும், நஷ்டயீட்டுத் தொகையாக விசேஷ டெபுடி-கலெக்டர் ரூ. 41,237-1-6 வழங்கியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு இங்கிலாந்து துணி

தூதுக் குழு வருகிறது

லங்காஷயர் பகுதித் துணியை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வது பற்றி ஆராய 6 பிரிட்டிஷ் பகுதி மார்க்கெட்டிங் நிபுணர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று அனுப்பப்படுமெனவும், அத்தூதுக் குழுவினர் டெல்லி, சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்வர் எனவும் தெரியவருகிறது.

இந்தியத் துணி ஆலைகள், பிரிட்டனுக்கு, குறைந்த விலைக்கு ஏராளமான தங்கள் சரக்குகளை ஏற்றுமதி செய்வதாகவும், அதனால் பிரிட்டனின் துணி ஆலைத் தொழிலுக்குப் போராபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

புது ஆயுதங்களை ரஷ்யா தயாரிக்குமாம்

அமெரிக்க அதிகாரியின் அச்சம்

ரஷ்யா புதுப் புது விதமான ஆயுதங்களைத் தயாரித்து திடீரென வைக்கக் கூடுமென்று அமெரிக்க இராணுவத் திட்ட நிபுணர்கள் அஞ்சுவதாக, ஒரு விமானப் படை நிபுணர், அமெரிக்க பிரதிநிதி சபை செலவின அனுமதிக் குழுவில் கூறியிருக்கிறார்.

புது இராணுவ ஆயுதத்தை இன்னும் 5 அல்லது 6 வருடத்தில் கொண்டு வரக்கூடும் என்றும் அவர் கூறினார். அவ்விதம் செய்தால், இப்போது ஆயுத 'தர்த்திறல்' ஏற்பட்டுள்ள உயரிய நிலை மாறி சர்வ தேச நிலை அடியோடு புரண்டு விடக்கூடும் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

பிச்சைக்காரர் பிரச்சினை!

அகில இந்திய அடிப்படையில், பிச்சைக்காரர் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான திட்டமொன்றை மத்திய அரசாங்கம் மக்கள் சபையில் சீக்கிரமே கொண்டுவரும் என்று தெரிகிறது.

இந்தத் தகவலை அசாம் முதன் மந்திரி பிஷ்னுராம் மேதி சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைக்கு மீஞ்சூராரின் சப்பைக்கட்டு!

முன்னுக்குப்பின் முரண்பட்ட பிரச்சினையை மழுப்புகிருர்!

“முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தொழில் வளர்ச்சிக்குப் போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினர்; இந்த மாநிலத்தின் நிலைகளுக்கு ஏற்ப, விவசாய அபிவிருத்தியில் தான் அதிகக் கவனம் செலுத்த வேண்டும், என்று கருதப்பட்டது; எனவேதான், பெருந்தொகைகள் (!) நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டன; இந்த நாட்டில் தீவிர விவசாயத்தில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும்.

“1951-ம் ஆண்டு கணக்குப்படி, இந்த நாட்டில் பயிரிடக்கூடிய—பயிரிடப்பட்டுவரும் நிலம் தலைக்கு 95 ‘சென்ட்’கள்தான்; ஆனல் உலகத்தில், அந்த அளவு தலைக்கு 351 ‘சென்ட்’களாகும்; எனவே, இதர மக்களுக்கு வேலை தருவதற்காக வேறு வழிகள் கண்டாக வேண்டும்; தொழில் அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

‘இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தொழில் அபிவிருத்தியில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்ற உறுப்பினர்களின் யோசனையை நான் ஒப்புகிறேன்,”

என்று மந்திரி பக்தவத்சலம், சென்னை சட்டசபையில், ‘தொழில்கள் மானியக்கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிருர்’

மதுரை காங்கிரஸ் உறுப்பினரான டி. கே. ராமா என்பவர், விவாதத்தின்போது கூறியதாவது:—

“விவசாயமில்லாத காலத்தில் விவசாயத் தொழிலாளருக்கு வேலை தரக்கூடிய வகையில், கூட்டுறவு முறையில் சில ரகக் குடிசைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுவது மிக அவசியமானது.

“இந்த மாநிலத்தில், பட்டு துணி உற்பத்திக்குத் தேவையான பட்டு நூல், மூன்றில் இரண்டு பங்கு வெளிநாட்டு இறக்குமதியையே நம்பி நடக்கிறது; எனவே, மல்பெரி பயிரிடுவதை, மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு விரிவுபடுத்துவது முடியுமா என்பது கண்டறியப்பட வேண்டும்.

“பட்டுப் பூச்சிகள் வளர்ப்பதும், லேஸ் பின்னல் தொழில் சென்னையில் ஆரம்பிப்பதும் வேண்டும் இவற்றிற்கெல்லாம் கிராமங்களுக்கு மின்சார வசதி தேவையாகும்.”

திருமதி ராஜம் — ராமசாமி பேசியதாவது:—

“கைத்தறிப் பிரச்சினை,ஏதாவது மானியத் தொகை, விற்பனைக் கழிவு இவை தரப்படுவதினுலேயே தீர்ந்துவிட முடியாது; ஆலைகளுடன் போட்டி போடக் கூடிய வகையில், கைத்தறிகளுக்கு நூல் விலை கட்டுப்படுத்தப்பட்டு வினியோகிக்கப்பட வேண்டும்.

“வேப்ப எண்ணெய், வேப்பஞ் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலைகள் இராமநாதபுரத்தில் துவக்கப்படலாம்.”

தக்கர்பாபா வித்தியாலயத்தை சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்றும், அது ஒரு விரிந்த அடிப்படை கொண்ட தொழில் அனுக்கக் கல்விக் கூடமாக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்

★

பக்தவத்சலம் பகர்கிருர்!

“பொதுமக்களிடையே எந்த ரகத் துணிகளுக்கு மதிப்பு இருக்கிறதோ அந்த ரகங்களை மட்டும் கைத்தறியாளர்கள் உற்பத்தி செய்ய வேண்டும்; கனுங்கோ குழுவின் அறிக்கைக்கு எதிராகக் ‘கோஷம்’ போடுவதில் உபயோகமில்லை; கைத்தறித் தொழிலுக்குப் பொதுமக்களின் ஆதரவு இருக்கும் முறையில் நடந்துகொள்ள வேண்டும்.”

இவ்வாறு, சென்னையில் நடைபெற்ற அகில இந்தியக் கைத்தறி வார விழாவின் 4-வது நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய மாநில தொழிலமைச்சர் பக்தவத்சலம் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், கைத்தறித் தொழிலுக்கு மேற்கொண்டு உதவி அளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி சர்க்கார் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்திருக்கிருர்.

தி. மு. கழக கிளைத் தேர்தல்

★

27—3—55 காலை 10 மணியளவில், ஈரோடு நகர தி. மு. கழகத் தேர்தல், எண் 342, நேத்தாஜி வீதியிலுள்ள கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

27—3—55 காலை 9 மணிக்கு கும்பகோணம் தி. மு. கழகத் தேர்தல், ஜெ. கீழ வீதியிலுள்ள அண்ணு அரண்மனையில் நடைபெறும்.

* * *

27—3—55 இரவு 7 மணி அளவில், பொள்ளாச்சி நகர தி. மு. கழகத் தேர்தல், கழக அலுவலகத்தில் நடைபெறும்.

மாயூரம் நடராசன் நினைவு வாசகசாலை

27—3—55 காலை 9 மணிக்கு: மாயூரம், சின்னக்கடைத் தெருவிலுள்ள மேற்படி வாசகசாலையின் இரண்டாவது ஆண்டு விழா, தோழர் க. அருணுசலம் தலைமையில் நடைபெறும். மாலையில் நகரப் பூங்காவில், தோழர் ஆர். பழனிச்சாமி தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பாரதிதாசன், க. அன்பழகன், நாஞ்சில் கண்ணப்பா ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கீரம்பூர்

குறிச்சி வீதி, மாரியம்மன் கோயில் மைதானத்தில்
27—3—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
கிருஷ்ணசாமி
பி. ராமானுசம்

★

அவணியாபுரம் (மதுரை)

அண்ணு திடலில்
27—3—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்

★

கோம்பை

பஞ்சாயத்து போர்டு முன்பாக
27—3—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: எம். முத்துச்சாமி
பேசுபவர்:
எம். எஸ். இராமசாமி

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்
27—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இளங்கண்ணன
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
பி. சமதர்மம்

இரவு 10 மணிக்கு, பாண்டியன் நாடக மன்றத்தார் நடிக்கும் ‘எடுத்துக்காட்டு’ எனும் நாடகம் நடைபெறும்.

ஐந்தாண்டுத் திட்ட கண்டனக்கூட்டங்கள்

★

விளாப்பாக்கம்

26—3—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
கே. சுப்பிரமணியம்

★

ஆமதாபாத்

மணிநகர் பத்ரவாலாசால் திடலில்
27—3—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: ந. சம்பந்தம்
பேசுவோர்:
இரா. வைத்திலிங்கம்
எஸ். சண்முகநாதன்
ஆர். டி. ஜலம்
பொ. வைத்திநாதன்
இரா. நடராசன்

சென்னை மாநில ஆரம்பப் பள்ளி மானேஜர், ஆசிரியர் மானேஜர் முதல் மாநாடு

27—3—55 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும்
இடம்: மெமோரியல் மண்டபம், சென்னை

★

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு
தலைமை தாங்குவார்

முதலமைச்சர் கே. காமராஜ நாடார்
மாநாட்டைத் துவக்கி வைப்பார்

★

எல்லா எயிடட் பள்ளி மானேஜர்களும், ஆசிரிய மானேஜர்களும் வருக

வரவேற்புக் கமிட்டித் தலைவர்:
A. R. சேஷாசலம்

P. வீரராகவன்,
N. A. நடேச முதலியார்
காரியதரிசிகள்

தென்னிந்திய சினிமா தொழிலாளர் மாநாடு

28—3—55 காலை 9 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்
மாநாட்டுத் திறப்பாளர்:
முதலமைச்சர் திரு. கே.காமராசர்
தலைவர்: டி. எஸ். இராமானுசம்
பேசுவோர்:
எம். பக்தவத்சலம்
என். எஸ். கிருஷ்ணன்
பி. என். நாகி ரெட்டி

* * *

மாலை 6 மணிக்கு
திருவல்லிக்கேணி கடற்கரையில்
பொதுக்கூட்டம்
பேசுவோர்:
சி. என். அண்ணுதுரை
ப. ஜீவானந்தம்
எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை

ஷேக் அப்துல்லாவை விடுவிக்க மனு!

காஷ்மீர் முன்னுள் பிரதமர் ஷேக் அப்துல்லாவை காவலிலிருந்து விடுவிக்கும்படி கோரிக்கொண்டு காஷ்மீர் சட்டசபையில் முன்னுள் உறுப்பினரான ஜெகத்ராம் ஆர்யன் என்பவர் காஷ்மீர் உயர் நீதிமன்றத்தில் ‘ஹேபியஸ் கார்ப்பஸ்’ மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருக்கிறார். இம்மனுவை எப்ரல் திங்கள் 4-ந் தேதி யன்று ‘புல் பெஞ்சு’ ஒன்று விசாரிக்க இருக்கிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

27—3—55 காலை 10 மணிக்கு, சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் சா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர்.

வரதட்சிணை முறை ஒழிய மார்க்கம்!

“பெண்களுக்கு வாரிசு உரிமை வழங்கப்பட்டு விட்டால், வரதட்சிணை முறை ஒழிந்துவிடும் என்று நம்புகிறேன்,”

என்று மத்திய சர்க்கார் சட்ட மந்திரி படாஸ்கர், டில்லி மேல் சபையில் கூறியிருக்கிருர்.

மேலும் அவர், சொன்னுர்:—

“ஒரு குடும்பம், ‘சமூகத்தின் உறுப்பு’ என்று கருதப்பட்டுவந்த ஒரு நிலைமாறி, இப்போது ஒவ்வொரு தனி நபரும் சமூகத்தின் உறுப்பு என்று கருதப்படும்படியான நிலை ஏற்பட்டுள்ளது; ஆகவே, அந்த உண்மைக்கேற்பவே தான் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும்; அவ்வுண்மையைத் தான், வாரிசு உண்மை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டுமே தவிர பழைய ‘அவிபக்தக் குடும்ப’ சித்தாந்தத்தை அனுசரிப்பதாக இருக்கக் கூடாது.”

உண்மை தானு?

சென்னை மாநில ரெவினியூ அமைச்சர் மாணிக்கவேலுநாயக்கர், தமது பெயருக்குப் பின்னுலுள்ள சாதிப் பெயரான ‘நாயக்கர்’ எனும் பதம் உபயோகிக்கப்படாமல், இனிமேல், ‘மாணிக்கவேலு’ என்றே அழைக்கப்படுவார் என்று தெரிகிறது.

[குறிப்பு: அண்மையில், மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமது பெயரில் இணைந்துள்ள ‘ஆச்சாரி’யைத் துறந்து விடப்போவதாகவும் பின்னர், அது, தாம் விளையாட்டாகக் கூறினதுதான் என்று சொன்னதும் இங்கு குறிப்பிடத் தக்கது.]

சென்னை நகரில், தியாகராய நகர், பெரம்பூர், வியாசர்பாடி ஆகிய இடங்களில் சாக்கடைத் திட்டங்களுக்காகச் சென்னை சர்க்கார் சென்னை நகர சபைக்கு ரூ. 87,500 கடன் வழங்கியிருக்கிறது. இந்தத் தொகையில், தியாகராய நகர் சாக்கடைத் திட்டத்திற்கு மட்டும் ரூ 47,500 செலவிடப்படுமாம்.

மராட்டியபார்ப்பனனின் பண ஆசை!

‘பேய்’க்கோலம்பூண்டான் பெரும் நிதி பெற்ருன்!

ஏச்சையும் ஏற்ருன்... இடம் பெயரவும் இசைந்தான்!

இந்து மதத்தால் யாருக்கு இலாபம்?

காட்மண்டு, மார்ச் 23—

ஸ்ரீ கிருஷ்ண பட்டர் என்ற ஒரு ஏழை மகாராஷ்டிர பார்ப்பனர், நரதேவி ஆலயத்தில் ‘திருப்பணி’ புரிபவர்; அவருக்கு திடீரென்று ‘யோகம்’ அடித்தது; லட்சாதிபதியானர்; ஆனுலும், ‘நாடு கடத்தப்பட்டார்’ என்று தெரியவருகிறது.

இயற்கை யெய்திய நேபாள மன்னர் திரிபுவனரது பதிமூன்றாம் நாள் சமச் சடங்கின்போது, அவர் விட்டுச்சென்ற பூலோகப் பொருள்களை எல்லாம், அப்பார்ப்பனர் மனமுவந்து பெற்றுக்கொண்டார்; அத்துடன், இறந்த மன்னரது பேயுருவை அவர் ஏற்றுக் கொள்வதாகவும் கருதப்படுகிறதாம்.

மன்னரின் விலையுயர்ந்த ஆஸ்திகளையும், பேயுருவையும் ஏற்றுச் செல்லும் அந்தப் பார்ப்பனர் யானை மீதேறி ஊரைவிட்டுத் துரத்தப்படுகையில், கூடியிருந்த மக்கள், பரம்பரைப் பழக்கப்படி அந்தப் பார்ப்பனர் மீது, கல்லெறிந்து கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தனராம்.

இனி எப்போதும் அந்தப் பார்ப்பனர், நேபாளத்திற்குள் வரக் கூடாதாம்! அவர் இனி ஒரு ‘நாடு கடத்தப்பட்டவர்’ என்று கருதப்படுவாராம்!

மன்னரின் பொருள்களை ஏற்றுக்கொண்ட அவர், மன்னரது சிகரெட் பிடிக்கும் கருவியை வாயில் வைத்து ‘நிச்சிந்தையாய்’ சிகரெட் புகை விட்டுக்கொண்டாராம்! அதற்குமுன் பாக்மதி ஆற்றங்கரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பந்தல் ஒன்றில் அவருக்கு ‘ராஜபோக’ விருந்தொன்றும் தரப்பட்டதாம்.

சுமார் 2 லட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்களும், 10,000 ரூபாய் ரொக்க தானமும் பெற்றுக் கொண்டார் அவர்!

இரண்டு யானைகள், ஒரு குதிரை, மன்னர் உறங்கிய உயர்ந்த ரக கட்டில்கள், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட விலையுயர்ந்த பொருள்கள் அவருக்குக் கிடைத்தன.

இறந்தமன்னரின் சொத்துக்கள் பட்டியலை கையில் வைத்துக் கொண்டு சாமான்களை சரிபார்த்த பின், அப்பார்ப்பனர் யானை மீது ஏறிக்கொண்டு, நேபாளத்தை விட்டுப் புறப்பட்டார்.

இந்தக் காட்சியைக் காண ஏராளமான மக்களும், பல உயர்தர இராணுவ அதிகாரிகளும் ஆற்றங்கரையில் கூடியிருந்தனர்.

இனி ஒருபோதும் அந்த பார்ப்பனர் நேபாள எல்லைக்குள் வரக் கூடாதவாறு இராணுவத்தினரும், போலீஸ்காரர்களும் பார்த்துக் கொள்வர்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம்.ஏ.